Verité Research
Strategic Analysis for Asia

# பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு:

## பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்

ஜூலை 2021

# பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு:

## பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்

---

ஜூலை 2021

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் பொருளாதாரக் குழு இந்த ஆய்வு அறிக்கையைத் தொகுத்து வழங்குகிறது. இந்தக் குழுவில் நைஜெல் கிரே, உதாஹிருனி அத்தபத்து ஆகியோர் உள்ளனர்.

ஆய்வுக்கான ஆதரவை லஹிரி ஜயசிங்க, யாஸ்மின் ராஜி, டிரானி விஜேவிக்கிரம, சல்மா ராசிக் மற்றும் தினுக் டி சில்வா ஆகியோர் வழங்கியுள்ளனர்.

ஒட்டுமொத்த ஆய்வுக்கான வழிகாட்டல், உள்ளடக்க மீளாய்வு மற்றும் மேற்பார்வையை நிஷான் டி மெல் மற்றும் தேஷல் டி மெல் வழங்கியுள்ளனர்.

மீளாய்வு மற்றும் ஆசிரிய உதவியை ஹஸ்னா முனாஸ் மற்றும் ஸ்டெப்னி நிக்கோல் வழங்கியுள்ளனர்.

வடிவமைப்பு மற்றும் தளவமைப்பை டினுக் சேனபத்திரன மேற்கொண்டார்

பதிப்புரிமை © 2021 வெரிட்டே ரிசேர்ச் பிரைவேட் லிமிடெட். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

கிரே, நைஜெல்

பால்நிலை பொறுப்பு வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு:
பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல் / நைஜெல கிரே சக உதாஹிருனி அத்தப-
த்து பதி. தேஷால் டி மெல் சக நிஷான் டி மெல் - கொழும்பு : வெரிட்டே ரெசெர்ச், 2021
ப. 38; ச. மீ. 26

ISBN 978-624-5514-17-5

i . 347.549305 DDC 23 ii. அத்தப்பத்து, உதாஹிருனி (சக ஆசிரியர்)
iii. டி மெல், தேஷால் (பதி.) iv. டி மெல், நிஷான் (பதி.)

1. வரவு செலவு திட்டம் - இலங்கை
2. பாலினம் - பொருளாதார பார்வை

ISBN: 978-624-5514-17-5

பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள்கள்: வெரிட்டே ரிசேர்ச் (2021). பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு: பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்

கொழும்பு: வெரிட்டே ரிசேர்ச்

முக்கிய சொற்பதங்கள்: பால்நிலை வரவு செலவுத் திட்டம், பாலின விழிப்புணர்வு, பாலின சமத்துவம், பாலினப் பொருளாதாரம்

ஏனைய ஆய்வறிக்கைகளைப் பதிவிறக்கம் செய்ய: https://www.veriteresearch.org/publication_type/research-reports/

உங்கள் கருத்துக்களை மின்னஞ்சல் செய்யுங்கள்: publications@veriteresearch.org

# உள்ளடக்கம்


அறிமுகம் ........ 5

மதிப்பீட்டிற்கான முறை ........ 7

தரவு சேகரிப்பு ........ 7

முன்னேற்றத்தை மதிப்பிடுதல் ........ 7

2018 - 2019 காலப்பகுதியில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் ........ 9

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடும் போது எதிர்கொண்ட சவால்கள ........ 16

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் வரைவிலக்கணத்தில் தெளிவின்மை ........ 16

மேற்பார்வை இல்லாமை ........ 17

குறைவான தகவல் வெளிப்பாடு ........ 17

அறிக்கையிடுவதில் முரண்பாடுகள் ........ 17

அமைச்சரவை மாற்றங்களினால் திறமையின்மை ........ 18

முடிவுரை ........ 19

பின்னிணைப்புகள் ........ 20

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கையின் விபரங்கள் ........ 20

பி.செ.சு 1 - ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றுத்தல் சதவீதத்தினை அதிகரித்தல் ........ 23

பி.செ.சு 2 - நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தினுடாக வீடுகளை கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல் ........ 24

பி.செ.சு 3 - பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை ........ 25

பி.செ.சு 4 - தேசிய தொழிற் பயிற்சி (NVQ) சான்றிதழ்கள் பெற்ற பெண்களின் சதவீதத்தினை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிர்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்தல் ........ 26

பி.செ.சு 5 - எஸ்எம்ஈ கடன்கள் மற்றும் மணியங்களினை பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை ........ 27

பி.செ.சு 6 - வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காக கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை ........ 28

பி.செ.சு 7 - தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையினை கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரித்தல் ........ 29

பி.செ.சு 8 - பால்நிலை நட்பு தொழில் சூழும் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை ........ 30

பி.செ.சு 9 - அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை ........ 31

பி.செ.சு 10 - அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிக்காட்டல்களின் எண்ணிக்கை ........ 32

பி.செ.சு 11 - திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும் அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை ........ 33

பி.செ.சு 12 - பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ........ 34

வரவு செலவுத் திட்ட அழைப்பு - 2018 க்கான மேலதிக பிற்சேர்க்கை மற்றும் 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் ........ 35

# காண்பிப்பு

காண்பிப்பு 1: மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகள் ........ 5

காண்பிப்பு 2: 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தின் சுருக்கம் ........ 9

# அறிமுகம்

கடந்த தசாப்தத்தில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதில் இலங்கையின் செயல்திறன் தொடர்ந்தும் மோசமாக உள்ளது. 2010 - 2019 காலப்பகுதிக்கான உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீட்டு (Global Gender Gap Index - GGGI) நிரல்படுத்தலில் இலங்கை பின்தங்கியிருப்பதற்கு நாட்டின் தலைவரின் பாலினக் குறிகாட்டியே முக்கிய காரணம் என வெரிட்டே ரிசேர்சின் முந்தைய பகுப்பாய்வு காட்டுகிறது. இந்தக் குறிகாட்டியை நீக்கினாலும் இலங்கையின் GGGI புள்ளி தொடர்ந்தும் மாறாமல் உள்ளது. இது நாட்டின் பாலின இடைவெளியைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.[1]

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட அழைப்பில், நிதியமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் (NBD) 2017 - 2019 முதல் நடுத்தரக்கால வரவு செலவுத்திட்டக் கட்டமைப்பின் கீழ் பாலின பொறுப்புமிக்க வரவு செலவுத்திட்டத்துக்கான புதிய கொள்கை மூலோபாயத்தை அறிமுகப்படுத்தியது. அதன் பிரகாரம் அனைத்து அமைச்சரவை அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு உருவாக்கியது. (காண்பிப்பு 1 ஐப் பார்க்கவும்). ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுதல் என்னும் 5 ஆவது இலக்குக்கு அமைவாக இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.[2]

**காண்பிப்பு 1:** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

| பி.செ.சு | தலைப்பு |
|---|---|
| 1 | ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றுத்தல் சதவீதத்தினை அதிகரித்தல். |
| 2 | நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தினுடாக வீடுகளை கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல். |
| 3 | பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை. |

1 ‘ரிடியூசிங் தி கப் இன் அன்டர்ஸ்டான்டிங் ஸ்ரீலங்கா□ஸ் ஜென்டர் கப்/ இலங்கையின் பாலின இடைவெளியைப் புரிந்துகொள்வதிலுள்ள இடை-வெளியைக் குறைத்தல்’ [Reducing the Gap in Understanding Sri Lanka's Gender Gap], டெய்லி மிரர், 4 மார்ச் 2011, http://www.dailymirror.lk/features/Reducing-the-gap-in-understanding-Sri-Lankas-gender-gap/185-206989 [இறுதியாக அணுகப்பட்டது 24 மே 2021].

2 ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக விவகாரங்களுக்கான திணைக்களத்தின் இணையதளம், ‘அச்சீவ் ஜென்டர் ஈகுவாலிட்டி அன்ட் எம்பவர் ஓல் விமன் அன்ட் கேர்ள்ஸ் / பாலின சமத்துவத்தைப் பெறுவதுடன் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுங்கள்’ [Achieve gender equality and empower all women and girls], https://sdgs.un.org/goals/goal5 [இறுதியாக அணுகப்பட்டது 31 மே 2021].

| | |
|---|---|
| 4 | தேசிய தொழிற் பயிற்சி (NVQ) சான்றிதழ்கள் பெற்ற பெண்களின் சதவீதத்தினை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிர்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்தல் |
| 5 | எஸ்எம்ஈ கடன்கள் மற்றும் மணியங்களினை பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை |
| 6 | வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காக கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
| 7 | தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையினை கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரித்தல் |
| 8 | பால்நிலை நட்பு தொழில் சூழும் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை |
| 9 | அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை |
| 10 | அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிக்காட்டல்களின் எண்ணிக்கை |
| 11 | திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும் அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை |
| 12 | பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்[3]

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை அனைத்து அமைச்சுகளும் மாகாண சபைகளும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும். கூடுதலாக, இந்தப் பகிரங்க அதிகாரசபைகள் பாலின விடயங்களைக் கையாள்வதற்கென அலுவலர் ஒருவரை நியமிப்பதுடன், பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கவும் கடமைப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் நோக்கங்கள் இரண்டு ஆகும். முதலாவது, இலங்கையில் பகிரங்க அதிகாரசபைகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றங்களை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இரண்டாவது, பிரதான செயலாற்றுகை சுட்டிகள் பற்றிய தகவல்கள் எவ்வாறு அரசாங்கத்தால் ஆவணப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன என்பதில் காணப்படும் முக்கிய பிரச்சினைகள் மற்றும் இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது.

3 விபரங்களுக்குப் பின்னிணைப்பைப் பார்க்கவும்.

# மதிப்பீட்டு முறை

## தரவு சேகரிப்பு

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் தகவல் அறியும் உரிமை (RTI) சட்டத்தின் கீழ் வெரிட்டே ரிசேர்ச் பல கோரிக்கைகளைத் தாக்கல் செய்தது. இந்த நிறுவனங்களின் விரிவான பட்டியல் மற்றும் கோரப்பட்ட தகவல்களின் வகைக்கு இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.

தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளைத் தாக்கல் செய்தது மாத்திரமன்றி, பிரதான செயலாற்றுகை சுட்டிகளைச் செயல்படுத்துவதற்கான ஆதாரங்களை ஒன்லைன் வலைதள தேடல்கள் மூலமும் வெரிட்டே ரிசேர்ச் பெற்றுக்கொண்டது. இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான காலம் 2018 - 2019 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

## முன்னேற்றத்தை மதிப்பிடுதல்

பிரதான செயலாற்றுகை சுட்டிகள் வேறுபடுவதால் அவற்றின் தன்மையின் அடிப்படையில் முன்னேற்றம் மதிப்பிடப்பட்டது.

சட்டம், ஒழுங்குமுறை அல்லது கொள்கை சார்ந்த (பிரதான செயலாற்றுகை சுட்டிகள் 6, 9, மற்றும் 11) பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் பின்வரும் மூன்று வகைகளில் ஒன்றாக மதிப்பிடப்பட்டுள்ளன:

- **முன்னேற்றம் இல்லை:** பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை அல்லது பெறப்பட்ட தகவல்கள் மதிப்பீட்டிற்குப் பயன்படுத்த முடியாது அல்லது மதிப்பீட்டு காலத்தின் தொடக்கத்திலிருந்து பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தில் எந்த மாற்றமும் காணப்படவில்லை அல்லது மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனப் பெறப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன.

- **பலவீனமான முன்னேற்றம்:** மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை மாற்றம் ஒருமுறை மட்டுமே நிகழ்ந்துள்ளது.

- **வலுவான முன்னேற்றம்:** மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

அளவிடக்கூடிய அல்லது எண்ணக்கூடிய பிரதான செயலாற்றுகை சுட்டிகளுக்கான முன்னேற்றம் (பிரதான செயலாற்றுகை சுட்டிகள் 1, 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12) பின்வரும் நான்கு வகைகளில் ஒன்றாக மதிப்பிடப்பட்டுள்ளன:

- **முன்னேற்றம் இல்லை:** பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை அல்லது பெறப்பட்ட தகவல்கள் மதிப்பீட்டிற்குப் பயன்படுத்த முடியாது அல்லது மதிப்பீட்டு காலத்தின் தொடக்கத்திலிருந்து பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தில் எந்த மாற்றமும் காணப்படவில்லை அல்லது மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனப் பெறப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன.

- **மோசமான முன்னேற்றம்:** மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறைந்தது/ மோசமடைந்தது (அதாவது அளவிடப்படும் சுட்டி மதிப்பீட்டு காலத்தில் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது).


- **பலவீனமான முன்னேற்றம்:** மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் 0 - 10% வரையில் காணப்படுகிறது.

- **வலுவான முன்னேற்றம்:** மதிப்பீட்டுக் காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படுகிறது.

# 2018 - 2019 காலப்பகுதியில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம்

10 பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 2 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் பலவீனமான முன்னேற்றத்தைக் கொண்டிருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன (காண்பிப்பு 2 ஐப் பார்க்கவும்).

**காண்பிப்பு 2:** 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தின் சுருக்கம்



பி.செ.சு 1

## ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றுத்தல் சதவீதத்தினை அதிகரித்தல்

*பெண் தொழிலாளர் பங்களிப்பு 2018 இல் 33.6% இலிருந்து 2019 இல் 34.5% ஆக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 10% வரம்பிற்குக் குறைவாக உள்ளது. ஆகவே இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டி பலவீனமான முன்னேற்றம் கொண்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

**பலவீனமான முன்னேற்றம்**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.28 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு 2

## நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தினுடாக வீடுகளை கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை*

**முன் னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**இல்லை**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
3

## பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**இல்லை**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
4

## தேசிய தொழிற் பயிற்சி (NVQ) சான்றிதழ்கள் பெற்ற பெண்களின் சதவீதத்தினை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிர்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்தல்

*தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெறும் பெண்களின் சதவீதம் 2018 இல் 39.3% இலிருந்து 2019 இல் 42.6% ஆக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு 10% வரம்புக்குக் கீழ் உள்ளதால் இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டி பலவீனமான முன்னேற்றம் கொண்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் குறித்த பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**பலவீனமான முன்னேற்றம்**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**இல்லை**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
5

## எஸ்எம்ஈ கடன்கள் மற்றும் மணியங்களினை பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.70 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
6

## வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பி-னை இலக்காக கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன் னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.3 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு 7

## தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையினை கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரித்தல்

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.4 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு 8

## பால்நிலை நட்பு தொழில் சூழும் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.93 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
9

## அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**இல்லை**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
10

## அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும்வழிக்காட்டல்களின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.38 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
11

## திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும் அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளுக்குப் பதிலளித்த நீதி அமைச்சு, மதிப்பீட்டுக் காலத்தில் பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டம் எதுவும் திருத்தப்படவில்லை/ சட்டமாக்கப்படவில்லை/செயற்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது. ஆகவே இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டி எந்த முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.12 மில்லியன்**

மொத்தச் செலவு

பின்னிணைப்பைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

பி.செ.சு
12

## பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை

*தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகள் மூலமாகவோ ஒன்லைன் வலைதள மதிப்பீடுகள் மூலமாகவோ பயன்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.*

**முன்னேற்றம் இல்லை**

முன்னேற்றத்தின் வகைப்பாடு

**ரூ.62 மில்லியன்**

மொத்தச் செலவு

பீ்னுீஜணுப்ஜபுப் புர்ருக்கு இஞ்கே குீளுீக் சேயுயுவுமு

# பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடும் போது எதிர்கொண்ட சவால்கள

மதிப்பீட்டிற்கான ஆய்வுமுறை முடிந்தவரை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தாலும், தகவல்களைப் பெறுவதில் காணப்பட்ட இடைவெளிகள் மற்றும் முரண்பாடுகள் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் சவாலாக இருந்தது. எதிர்கொண்ட முக்கிய சவால்கள் மற்றும் அவற்றைச் சரிசெய்ய முன்னெடுக்கப்பட்ட படிகளை இந்தப் பிரிவு குறிப்பிடுகிறது.

## பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் வரைவிலக்கணத்தில் தெளிவின்மை

12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் ஒன்று கூட குறிப்பிட்ட காலப்பகுதியில் அடைய வேண்டிய அல்லது பேண வேண்டிய இலக்கைக் கொண்டிருக்கவில்லை. பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டாலும், இலக்கு ஒன்றுக்கு எதிரான அதன் முன்னேற்றத்தை ஒப்பிடுவதிலும், எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை மதிப்பிடுவதிலும் சிக்கல் காணப்பட்டது.

இலக்கில் தெளிவின்மையை நிவர்த்தி செய்வதற்காக மதிப்பீட்டுக் குழு பலவீனமான முன்னேற்றத்திற்கு வரம்பொன்றை நிர்ணயித்தது. ஒழுங்குமுறைகள் அல்லது சட்டங்களாகக் காணப்படும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளுக்கு மதிப்பீட்டுக் காலத்தில் ஒரேயொரு கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை மாற்றம் மட்டுமே நிகழ முடியும் என வரையறுத்தது. பிற அனைத்து பிரதான செயலாற்றுகை சுட்டிகளுக்கும் 10 சதவீத முன்னேற்றத்தை வரையறுத்தது. உதாரணமாக, பிரதான செயலாற்றுகை சுட்டி 12 'பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைக்' குறிப்பிடுகிறது. எனினும் இந்த ஒதுக்கீடுகளைக் காலப்போக்கில் அதிகரிக்க வேண்டுமா அல்லது அது குறைந்தபட்ச வரம்பைப் பூர்த்தி செய்ய வேண்டுமா என்பது குறிப்பிடப்படவில்லை. தற்போதைய மதிப்பீட்டில் 10% வருடாந்த அதிகரிப்பு என்பது பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்தை விட அதிகரித்தால் அது வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

தெளிவான இலக்கு இல்லாதது தவிர, பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் பரந்த வரையறையும் முன்னேற்றம் அடைந்தால் அதை மதிப்பிடுவதை சிரமமாக்கியது. உதாரணமாக, பிரதான செயலாற்றுகை சுட்டி 7 'தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையைக் கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரிக்க வேண்டும்' எனக் குறிப்பிடுகிறது. எனினும் மதிப்பீட்டுக் காலத்தில் தீர்மானம் எடுக்கும் பதவிகளிலுள்ள பெண்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால் அது கொள்கை தலையீட்டின் நேரடி விளைவா அல்லது கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இல்லாவிட்டாலும் பெண்கள் இந்தப் பதவிகளைப் பெற்றிருப்பார்களா என்பதைத் தீர்மானிப்பது சாத்தியமற்றது.

## மேற்பார்வை இல்லாமை

நிதி அமைச்சு, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகிய இரண்டு பகிரங்க பொதுச்சபைகளும் அனைத்து அமைச்சுகள் மற்றும் மாகாண சபைகளிடமிருந்து பாலினம் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளன. பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்கான பொறுப்பு 2018 வரவு செலவுத் திட்ட அழைப்பில் நிதியமைச்சிடம் வழங்கப்பட்டிருந்தது. பொறுப்பு வழங்கப்பட்டிருந்தாலும் மேற்பார்வையிட வேண்டிய இரண்டு அமைப்புகளும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், மதிப்பிடவும் பயன்படுத்தப்பட வேண்டிய முறை குறித்த தகவல்களை வழங்கவில்லை. மேற்பார்வையிடும் அமைப்புகள் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை திறன்பட கண்காணிக்கவில்லை என்பதையும், எதிர்பார்க்கப்படும் செயல்திறனில் இருந்து விலகும் போது கவனத்திற்கு கொண்டுவரவில்லை என்பதையும் தகவல்களை வழங்காமை, குறைவான தகவல் வெளிப்பாடு ஆகியன வெளிப்படுத்துகின்றன.

## குறைவான தகவல் வெளிப்பாடு

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம், ‘இச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பிரசை ஒவ்வொருவரும் ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமை உண்டு’ எனக் குறிப்பிடுகிறது. எனினும் வெரிட்டே ரிசேர்ச் தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளுக்குக் கிடைத்த தகவல்கள் பெரும்பாலும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் போதுமானதாக இல்லை. உதாரணமாக, குறிப்பிட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பித்த பகிரங்க அதிகாரசபைகளின் பட்டியலை நிதி அமைச்சு வழங்கியிருந்தாலும், இந்தப் பகிரங்க அதிகாரசபைகள் சமர்ப்பித்த தகவல்களின் வகை அல்லது பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது குறித்த மேலதிக விபரங்களை வழங்கவில்லை.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பான செலவுகள் குறித்த தகவல்கள் நிதி அமைச்சிடம் இருந்து பெறப்பட்டன. எனினும் இது மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செலவிட்ட தொகையா அல்லது அனைத்து பகிரங்க அதிகாரசபைகளும் பிரதான செயலாற்றுகை சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்காக செலவிட்ட தொகையா என்பது குறிப்பிடப்படவில்லை.

தகவல் அறியும் கோரிக்கைகள் மூலம் பெறப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களின் சிக்கலானது, பிரதான செயலாற்றுகை சுட்டிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்களைக் கண்டறிய முன்னெடுக்கப்பட்ட ஒன்லைன் வலைதள தேடல்களிலிருந்து பெறப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களால் மேலும் அதிகரிக்கிறது.

## அறிக்கையிடுவதில் முரண்பாடுகள்

குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் பகிரங்க அதிகாரசபைகள் ஒரே அளவீட்டிற்கு வெவ்வேறு பெறுமதிகளைக் குறிப்பிடுகின்றன. அறிக்கையிடுவதில் காணப்படும் இந்த முரண்பாடு முன்னேற்றத்தை மதிப்பிடும் போது எந்தப் பெறுமதியைப் பயன்படுத்த வேண்டும் என்ற குழப்பத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக, பிரதான செயலாற்றுகை சுட்டி 4ல், தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே 67.9% மற்றும் 66% என இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு குறிப்பிடுகிறது (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அவர்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில்). எனினும், அதே காலப்பகுதிக்கான பெறுமதிகளாக திறன் விருத்தி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு 75.3% மற்றும் 64.8 சதவீதத்தைக் குறிப்பிடுகின்றது.

## அமைச்சரவை மாற்றங்களினால் திறமையின்மை

இலங்கையில் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் அடிக்கடி அமைச்சரவை மாற்றங்களை மேற்கொள்வது புதிதல்ல. அடிக்கடி 'அமைச்சுக்களைப் பிரிப்பது மற்றும் இணைப்பது' மத்திய அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் பொறுப்புக்கூறுவதில் குறைபாட்டை ஏற்படுத்துகிறது.[4] இந்தச் சிக்கல்கள் பிரதான செயலாற்றுகை சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதிலும் தெளிவாகக் காணப்படுகிறது.

ஓகஸ்ட் 2020 இல் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதான செயலாற்றுகை சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான முக்கிய மேற்பார்வை அமைப்புகளில் ஒன்றான மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக கல்வி அமைச்சின் கீழ் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு உருவாக்கப்பட்டது.[5] இந்த பகுப்பாய்வுக்கான மதிப்பீட்டு காலத்தில் இந்த மாற்றம் நிகழாவிட்டாலும் இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். முன்னாள் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் பொறுப்புகள் இந்த மாற்றத்தைத் தொடர்ந்து பிற அமைச்சுகளிடம் பரவலாகக் கையளிக்கப்பட்டிருக்கலாம்.

தொடர்ச்சியான மாற்றங்கள் அரசாங்கத்தில் குறிப்பிட்ட ஒரு செயல்பாட்டிற்கு எந்த அமைச்சு பொறுப்பு வகிக்கின்றது என்பதை அடையாளம் காண்பதில் உள்ள சிக்கல்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இது மோசமான செயல்திறனுக்காக முகவரகங்களைப் பொறுப்புக்கூற வைக்கும் திறனைப் பாதிக்கிறது.

4 வெரிட்டே ரிசேர்ச், எ ரஷனல் மெதேட் ∴போர் கபினெட் ∴போர்மேஷன் இன் ஸ்ரீ லங்கா: எ வையிட் பேப்பர்/இலங்கையில் அமைச்சரவையை அமைப்பதற்கான ஒரு பகுத்தறிவு முறை: வெள்ளை அறிக்கை [A Rational Method for Cabinet Formation in Sri Lanka: A White Paper] (ஓகஸ்ட் 2020), https://www.veriteresearch.org/publication/cabinet-white-paper-sri-lanka/ [இறுதியாக அணுகப்பட்டது 09 ஜுன் 2021].

5 அதிவிசேட வர்த்தமானி, இல. 2187/27 09 ஓகஸ்ட் 2020 வெளியிடப்பட்டது, http://www.documents.gov.lk/files/egz/2020/8/2187-27_E.pdf [இறுதியாக அணுகப்பட்டது 09 ஜுன் 2021].

# முடிவுரை

2018 வரவு செலவுத்திட்ட அழைப்பின் மூலம் பால் சமத்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் அறிமுகமானது இலங்கையில் முக்கிய சமூக பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் ஒரு சாதகமான முயற்சியாகும். எவ்வாறாயினும், இந்த முயற்சியை செயல்படுத்துவதில் மட்டுப்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உள்ளது என்பது தெளிவாகிறது. பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அடைவதில் குறைவான முன்னேற்றமே காணப்படுகிறது, சிலவற்றில் எந்த முன்னேற்றமும் இல்லை.

கண்காணிப்பு மற்றும் அதனைப் பின்தொடரும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்பதுடன் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றமின்மை தொடர்புபடுகிறது. முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான முயற்சி காணப்பட்டிருந்தால் அதை நடைமுறைப்படுத்தும் முகவரகங்கள் தங்களுக்குப் பணிக்கப்பட்டிருந்த கடமைகளைச் செயல்படுத்த ஊக்கியாக இருந்திருக்கும். உள்ளக அரச முகவரகங்களுக்குள் கூட திறனுள்ள கண்காணிப்பு மற்றும் பின்னூட்டப் பொறிமுறை காணப்படாவிட்டால் சாதகமான கொள்கை முயற்சி கூட சமூகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

போதுமான மேற்பார்வையில்லாதால் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினையானது, பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பான தகவல்களைப் வெளிப்படுத்தாததால் இன்னும் மோசமாகிறது. பொது நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ள முடியாமை பகிரங்க அதிகாரசபைகளைக் கேள்வி கேட்பதற்கான பொதுமக்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

இதைவிடப் பிரச்சினை என்னவென்றால், சில முயற்சிகளுக்கு செலவு செய்யப்பட்டுள்ள போதும் இதுவரை எந்தவித முன்னேற்றமும் பதிவு செய்யப்படாததுடன் செயல்பாடுகளும் கண்காணிக்கப்படவில்லை. உதாரணமாக, பிரதான செயலாற்றுகை சுட்டி 11 ‘*திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்றன சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கையை*’ குறிப்பிடுகிறது. இதற்கு ரூ.12 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதும் நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல் அறியும் உரிமை பதிலின் அடிப்படையில் மதிப்பீட்டுக் காலத்தில் எந்தவித முன்னேற்றமும் பதிவு செய்யப்படவில்லை. பொது நிதியை நிர்வகிப்பதில் பொறுப்பின்மையை இது சுட்டிக்காட்டுகிறது.

நிலையான அபிவிருத்தியில் பால் சமத்துவத்தினை அடைவதற்கும், பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதற்குமான 5 ஆவது இலக்கு, 2030 ஆம் ஆண்டளவில் நாடுகள் எட்ட வேண்டிய 17 நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளில் (SDG) ஒன்றாகும். இலங்கையில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் பால் சமத்துவம் உறுதிசெய்யப்படுவதை நோக்கிச் செல்வதில் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறுதல் போதுமானதாக இல்லாதது குறிப்பிடத்தக்க தடையாக இருப்பதை இந்த அறிக்கை காட்டுகிறது.

# பின்னிணைப்புகள்

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கையின் விபரங்கள்

| | அரசாங்க ஸ்தாபனங்கள் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| 1 | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் | வரவு செலவு திட்டத் தயாரிப்பு மற்றும் நடைமுறைப்படுத்துதை மேற்பார்வையிடும் அமைப்பு. | 2018 - 2019 காலப்பகுதிக்கான அனைத்து 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற அரச முகவரகங்களில் இருந்து பெறப்பட்டன. |
| 2 | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணுவதை மேற்பார்வையிடும் அமைப்பு. | 2018 - 2019 காலப்பகுதிக்கான 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றமும், பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தகவல் அமைப்புகளும் நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற அரச முகவரகங்களில் இருந்து பெறப்பட்டன. |
| 3 | அ) நிதி அமைச்சு<br>ஆ) அரச சேவை, மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | பிரதான செயலாற்றுகை சுட்டி 3 நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடும் அமைச்சுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. | ▪ 2017 - 2019 காலப்பகுதியில் பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்துப் பேணும் அரச நிறுவனங்களின் எண்ணிக்கை<br>▪ பி.செ.சு 3 மற்றும் / அல்லது நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 உடன் இணைக்கப்பட்ட திட்டங்களின் (அதனுடன் தொடர்புடைய செயல் திட்டங்களுடன்) பட்டியல்<br>▪ பிரதான செயலாற்றுகை சுட்டி நடைமுறைப்படுத்தப்படாவி-ட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது என எதிர்பார்க்கப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள். காரணங்களையும் விளக்கங்களையும் கொண்ட உத்தியோகப்பூர்வ ஆவணங்களை உள்ளடக்கியது.<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களைக் கையாளும் அலுவலரின் தொடர்பு தகவல்கள்<br>▪ அமைச்சில் பராமரிக்கப்படும் பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளின் பட்டியல். |

| | அரசாங்க ஸ்தாபனங்கள் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| 4 | அ) திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு<br>ஆ) இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு | பிரதான செயலாற்றுகை சுட்டி 4 நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடும் அமைச்சுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. | ▪ 2017 - 2019 காலப்பகுதியில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்ற பெண்களின் சதவீதம் மற்றும் தொழில்நுட்ப தொழிற்பயிற்சியில் வேலைவாய்ப்பைப் பெற்றவர்களின் எண்ணிக்கை<br>▪ பி.செ.சு 4 மற்றும் / அல்லது நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 உடன் இணைக்கப்பட்ட திட்டங்களின் (அதனுடன் தொடர்புடைய செயல் திட்டங்களுடன்) பட்டியல்<br>▪ பிரதான செயலாற்றுகை சுட்டி நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது என எதிர்பார்க்கப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள். காரணங்களையும் விளக்கங்களையும் கொண்ட உத்தியோகபூர்வ ஆவணங்களை உள்ளடக்கியது.<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களைக் கையாளும் அலுவலரின் தொடர்பு தகவல்கள்<br>▪ அமைச்சில் பராமரிக்கப்படும் பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளின் பட்டியல். |
| 5 | அ) அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>ஆ) நிதி அமைச்சு<br>இ) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | பிரதான செயலாற்றுகை சுட்டி 7 நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடும் அமைச்சுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. | ▪ 2017 - 2019 காலப்பகுதியில் தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கை<br>▪ பி.செ.சு 7 மற்றும் / அல்லது நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 உடன் இணைக்கப்பட்ட திட்டங்களின் (அதனுடன் தொடர்புடைய செயல் திட்டங்களுடன்) பட்டியல்<br>▪ பிரதான செயலாற்றுகை சுட்டி நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது என எதிர்பார்க்கப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள். காரணங்களையும் விளக்கங்களையும் கொண்ட உத்தியோகபூர்வ ஆவணங்களை உள்ளடக்கியது.<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களைக் கையாளும் அலுவலரின் தொடர்பு தகவல்கள்<br>▪ அமைச்சில் பராமரிக்கப்படும் பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளின் பட்டியல். |

| | அரசாங்க ஸ்தாபனங்கள் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| 6 | தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | பிரதான செயலாற்றுகை சுட்டி 9 நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடும் அமைச்சுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. | ▪ 2017 - 2019 காலப்பகுதியில் அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை<br>▪ பி.செ.சு 9 மற்றும் / அல்லது நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 உடன் இணைக்கப்பட்ட திட்டங்களின் (அதனுடன் தொடர்புடைய செயல் திட்டங்களுடன்) பட்டியல்<br>▪ பிரதான செயலாற்றுகை சுட்டி நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது என எதிர்பார்க்கப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள். காரணங்களையும் விளக்கங்களையும் கொண்ட உத்தியோகப்பூர்வ ஆவணங்களை உள்ளடக்கியது.<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களைக் கையாளும் அலுவலரின் தொடர்பு தகவல்கள்<br>▪ அமைச்சில் பராமரிக்கப்படும் பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளின் பட்டியல். |
| 7 | நீதி அமைச்சு | பிரதான செயலாற்றுகை சுட்டி 11 நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடும் அமைச்சாக அடையாளம் காணப்பட்டுள்ளது. | ▪ 2017 - 2019 காலப்பகுதியில் திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்றன சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை<br>▪ பி.செ.சு 11 மற்றும் / அல்லது நிலையான அபிவிருத்தி இலக்குகள் 5 உடன் இணைக்கப்பட்ட திட்டங்களின் (அதனுடன் தொடர்புடைய செயல் திட்டங்களுடன்) பட்டியல்<br>▪ பிரதான செயலாற்றுகை சுட்டி நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது என எதிர்பார்க்கப்பட்டால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள். காரணங்களையும் விளக்கங்களையும் கொண்ட உத்தியோகப்பூர்வ ஆவணங்களை உள்ளடக்கியது.<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களைக் கையாளும் அலுவலரின் தொடர்பு தகவல்கள்<br>▪ அமைச்சில் பராமரிக்கப்படும் பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளின் பட்டியல். |

## பி.செ.சு 1 - ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றுத்தல் சதவீதத்தினை அதிகரித்தல்

<table>
<tr><th>பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்</th><th>மூலம்</th><th>பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து</th><th>முன்னேற்றத்தின் வகைப்பாடு</th></tr>
<tr>
<td>
1)<br>தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வலைதளத்தில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பெண் தொழிலாளர் பங்களிப்பு குறித்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
<table>
<tr><th></th><th>ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பு வீதம் (%)</th></tr>
<tr><td>2019</td><td>42.9</td></tr>
<tr><td>2018</td><td>39.3</td></tr>
</table>
2)<br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து பகிரங்க அதிகாரசபைகளும் பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்களை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்துள்ளது. அவை:<br>
1. துறைமுகங்கள் மற்றும் கப்பல் அமைச்சு<br>
2. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br>
3. மாகாண விவசாய அமைச்சு (சபரகமுவா)<br>
4. காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு<br>
5. பொது நிர்வாகம், ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு.<br>
3)<br>தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்கு வழங்கிய பதிலில், 2018 - 2019 காலப்பகுதியில் இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டி தொடர்பான 3 திட்டங்களை நடத்தியதாகவும் இந்தத் திட்டங்கள் மாதிரி கிராமம், சூழலியல் சுற்றுலா மற்றும் சுய வேலைவாய்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது எனவும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த வேலைத்திட்டங்களுக்காக ரூ.28.03 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.
</td>
<td>
1)<br>தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்<br>
2)<br>நிதி அமைச்சு<br>
3)<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சு
</td>
<td>
இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் ஊழியப்படையில் பெண்கள் பங்கேற்பின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாகவே கருதப்படும். 10™ விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>
குறித்த ஐந்து பகிரங்க அதிகாரசபைகளினால் வழங்கப்பட்ட தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்து கூடுதல் விபரங்களை நிதி அமைச்சு தரவில்லை.<br><br>
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>
இதன் விளைவாக சுவுஜ கோரிக்கைகள் ஊடாக நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிடம் இருந்து எந்தப் பயனுள்ள தகவல்களையும் பெற முடியவில்லை.<br><br>
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையதளத்தில் ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான தகவல்கள் காணப்பட்டன. ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பில் 2018 முதல் 2019 வரை 9.16% அதிகரிப்பு காணப்படுகிறது. 9.16% என்பது 10™ என்னும் வரம்பை விடக் குறைவு என்பதால் பி.செ.சு பலவீனமான முன்னேற்றமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
</td>
<td>பலவீனமான முன்னேற்றம்</td>
</tr>
</table>

## பி.செ.சு 2 - நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தினுடாக வீடுகளை கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)**<br>குறிப்பிட்ட பி.செ.சு முன்னேற்றம் தொடர்பான தகவல்களை ஆரம்ப கைதொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு வழங்கி உள்ளதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்துள்ளது. | **1)**<br>நிதி அமைச்சு | இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>ஆரம்ப கைதொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்து நிதி அமைச்சு கூடுதல் விபரங்களைத் தரவில்லை.<br><br>இதன் காரணமாக நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்கள் பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாக இல்லை. எனவே பிரதான செயலாற்றுகை சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## பி.செ.சு 3 - பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| 1)<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்தது.<br><br>2)<br>பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை 12 பகிரங்க அதிகாரசபைகள் வழங்கியதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு சுவுஜ கோரிக்கைக்குப் பதிலளித்தது.<br><br>அந்த அதிகாரசபைகள்:<br><br>1. காணி உபயோகம் மற்றும் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்<br>2. தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்<br>3. உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>4. ஊவா மாகாண சபை - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்<br>5. ஊவா மாகாண சபை - வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்வழங்கல், தோட்ட உட்-கட்டமைப்பு அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் தமிழ் கல்வி தொடர்பான அமைச்சு<br>6. வட மத்திய மாகாண சபை - மாகாண காணி, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் மகளிர் விவகாரங்கள் தொடர்பான அமைச்சு<br>7. ஆரம்ப கைத்தொழில் அமைச்சு<br>8. பெருந்தோட்ட அமைச்சு<br>9. இளைஞர் விவகாரங்கள், மகளிர் விவக-ாரங்கள், கிராம அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் தொழில்கள் அமைச்சு<br>10. காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு<br>11. விளையாட்டு மற்றும் கப்பல்துறை அமைச்சு<br>12. சபரகமுவ மாகாண சபை | **1)**<br>நிதி அமைச்சு<br><br>**2)**<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்து பேணும் அரச நிறுவனங்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>குறித்த பி.செ.சு தொடர்பில் தகவல் வழங்கியுள்ள பகிரங்க அதிகாரசபைகளின் எண்ணிக்கை தொடர்பில் நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகியன ஒன்றுகொன்று முரணான தகவல்களை வழங்கியுள்ளன.<br><br>மேலும் நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சு ஆகியன குறித்த தகவல்கள் எந்த காலப்பகுதிக்கு உரியன என்பதையும் குறிப்பிடவில்லை.<br><br>இதன் காரணமாக நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகியவற்றினால் வழங்கப்பட்ட தகவல்கள் பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாக இல்லை. எனவே பிரதான செயலாற்றுகை சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## பி.செ.சு 4 - தேசிய தொழிற் பயிற்சி (NVQ) சான்றிதழ்கள் பெற்ற பெண்களின் சதவீதத்தினை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிர்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்தல்

<table>
<tr><th>பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்</th><th>மூலம்</th><th>பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து</th><th>முன்னேற்றத்தின் வகைப்பாடு</th></tr>
<tr>
<td>
1)<br>
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் 2018 மற்றும் 2019களில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்கள் மற்றும் அவர்களுக்கான மொத்த வேலைவாய்ப்பு சதவீதம் குறித்த தகவல்களை இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு வழங்கியது.
<table>
<tr><th></th><th>2018</th><th>2019</th></tr>
<tr><td>தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை</td><td>1,263</td><td>1,185</td></tr>
<tr><td>தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்ற பெண்களின் %</td><td>67.9%</td><td>66.0%</td></tr>
<tr><td>தொழில்வாய்ப்பினைப் பெற்ற பெண்கள்</td><td>275</td><td>N/A</td></tr>
<tr><td>தொழில்வாய்ப்பினைப் பெற்ற பெண்களின் %</td><td>88.7%</td><td>N/A</td></tr>
</table>
2)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பெண்களின் சதவீதம் தொடர்பான தகவல்களை திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு வழங்கியது. இராஜாங்க அமைச்சு வழங்கிய தகவல்கள் ஐந்து மூலங்களினால் வழங்கப்பட்ட 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டவை. அவை:
<table>
<tr><th></th><th>2018</th><th>2019</th></tr>
<tr><td>தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் (DTET)</td><td>32.4%</td><td>38.4%</td></tr>
<tr><td>தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA)</td><td>25.8%</td><td>30.4%</td></tr>
<tr><td>தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA)</td><td>38.3%</td><td>35.3%</td></tr>
<tr><td>தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC)</td><td>75.3%</td><td>64.8%</td></tr>
<tr><td>தனியார் நிறுவனங்கள்</td><td>52.3%</td><td>55.4%</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>39.3%</td><td>42.9%</td></tr>
</table>
3)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், ஐந்து பகிரங்க அதிகாரசபைகள் பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்களை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது. அந்தப் பகிரங்க அதிகாரசபைகள்:<br>
1. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு<br>
2. துறைமுகங்கள் மற்றும் கப்பல் அமைச்சு<br>
3. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு<br>
4. சபரகமுவ மாகாண சபை<br>
5. காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு
</td>
<td>
1)<br>
இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு<br><br>
2)<br>
திறன்விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சு<br><br>
3)<br>
நிதி அமைச்சு
</td>
<td>
இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெறும் பெண்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை தொடர்பில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சும் திறன்விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சும் வழங்கிய தரவு பொருந்தவில்லை.<br><br>
ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்தோ நிதி அமைச்சு கூடுதல் விபரங்களைத் தரவில்லை.<br><br>
பெண்கள் வேலைவாய்ப்பு வீதம் தொடர்பான தகவல்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு மட்டுமே உள்ளதால் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பெண்களின் சதவீதத்தின் அடிப்படையிலேயே முன்னேற்றத்துக்கான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. (இது திறன்விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சினால் வழங்கப்பட்டது). 2018 - 2019ல் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பெண்களின் வீதம் 9.16 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்தப் பெறுமதியானது மதிப்பீட்டு காலத்தின் ஆரம்பத்தில் 10% அதிகரிப்பை விடக் குறைவாக காணப்பட்டதால் பிரதான செயலாற்றுகை சுட்டி பலவீனமான முன்னேற்றம் என வகைப்படுத்தப்படுகிறது.
</td>
<td>பலவீனமான முன்னேற்றம்</td>
</tr>
</table>

## பி.செ.சு 5 - எஸ்எம்ஈ கடன்கள் மற்றும் மணியங்களினை பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)** கைத்தொழில் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சு குறித்த பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது.<br><br>**2)** தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செ.சு தொடர்பாக 2 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இவை வடக்கு, கிழக்கில் பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையை (CEDAW) நடைமுறைபடுத்துவது தொடர்பாகவும், இலங்கை மகளிர் பணியகத்தின் கீழான திட்டங்களுக்காகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கு ரூ.70.39 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்ற தகவலும் வழங்கப்பட்டுள்ளது. | **1)** நிதி அமைச்சு<br><br>**2)** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள்இராஜாங்க அமைச்சு | இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் எஸ்.எம்.ஈ கடன்கள் மற்றும் மானியங்களைப் பயன்படுத்தி பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>கைதொழில்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்தோ நிதி அமைச்சு கூடுதல் விபரங்களைத் தரவில்லை.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>இதன் காரணமாக நிதி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகிய இரண்டும் வழங்கிய தகவல்கள் பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாக இல்லை. இதனால் பி.செ.சு எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

**பி.செ.சு 6 - வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காக கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை**

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)**<br>தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலாக 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செ.சு தொடர்பில் ரூ.3.05 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு தகவல் வழங்கியது. | **1)**<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வழங்கிய தகவல்கள் போதுமானதாக இல்லை. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## பி.செ.சு 7 - தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையினை கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரித்தல்

<table>
<tr><th>பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்</th><th>மூலம்</th><th>பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து</th><th>முன்னேற்றத்தின் வகைப்பாடு</th></tr>
<tr>
<td>
1)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 7 மூலங்களில் இருந்து அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வழங்கியது. அவை:
<table>
<tr><th></th><th>31.12.2018</th><th>31.12.2019</th></tr>
<tr><td>இலங்கை நிர்வாக சேவை</td><td colspan="2">*</td></tr>
<tr><td>இலங்கை பொறியியல் சேவை</td><td>337</td><td>344</td></tr>
<tr><td>இலங்கை விஞ்ஞான சேவை</td><td>295</td><td>305</td></tr>
<tr><td>இலங்கை கட்டிட நிர்மாண சேவை</td><td>30</td><td>31</td></tr>
<tr><td>இலங்கை திட்டமிடல் சேவை</td><td>N/A</td><td>388</td></tr>
<tr><td>இலங்கை கணக்காளர்கள் சேவை</td><td>716</td><td>877</td></tr>
<tr><td>இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (தரம் ஐ ரூ ஐஐ)</td><td>130</td><td>151</td></tr>
</table>
*30-09-2020 அன்று பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல் மட்டுமே கிடைத்தது. அன்றைய திகதியில் 1,322 பெண்கள் காணப்பட்டனர்.<br><br>
2)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலாக நிதி அமைச்சு 5 மூலங்களில் இருந்து அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வழங்கியது. அவை:
<table>
<tr><th></th><th>பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>இலங்கை நிர்வாக சேவை</td><td>1,235</td></tr>
<tr><td>இலங்கை திட்டமிடல் சேவை</td><td>396</td></tr>
<tr><td>இலங்கை கணக்காளர்கள் சேவை</td><td>878</td></tr>
<tr><td>இலங்கை விஞ்ஞானம் மற்றும் கட்டிட நிர்மாண சேவை</td><td>251</td></tr>
<tr><td>இலங்கை பொறியியல் சேவை</td><td>342</td></tr>
</table>
3)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வழங்கிய பதிலில் இந்த பிரதான செயலாற்றுகை சுட்டிக்காக 2018 - 2019 காலப்பகுதியில் ரூ.4.04 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.
</td>
<td>
1)<br>
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>
2)<br>
நிதி அமைச்சு<br><br>
3)<br>
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
</td>
<td>
இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகிய இரண்டும் பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளன. எனினும் தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்கள் இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளனரா எனக் குறிப்பிடப்படவில்லை. மேலும் குறித்த தகவலுடன் தொடர்புடைய காலப்பகுதி பற்றியும் நிதி அமைச்சு குறிப்பிடவில்லை.<br><br>
மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>
இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகியன வழங்கிய தகவல்கள் போதுமானதாக இல்லை. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.இதன் விளைவாக, அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிதி அமைச்சு, மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி அறநெறிப் பாடசாலைகள் கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சு பெற்ற தகவல்கள் பி.செ.சு உடைய வளர்ச்சியினை மதிப்பிட போதுமானவையாக இல்லாததன் காரணமாக பி.செ.சு ஆனது எவ்வித அபிவிருத்தியும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
</td>
<td>எவ்வித முன்னேற்றமும் இல்லை</td>
</tr>
</table>

## பி.செ.சு 8 - பால்நிலை நட்பு தொழில் சூழும் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை

<table>
<tr><th>பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்</th><th>மூலம்</th><th>பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து</th><th>முன்னேற்றத்தின் வகைப்பாடு</th></tr>
<tr>
<td>1)<br>இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியன குறித்த பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்துள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையினால் பகல் நேர பராமரிப்பு நிலையம் தொடர்பாக வழங்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:<br><br>
<table>
<tr><td>குழந்தைகளின் எண்ணிக்கை</td><td>26</td></tr>
<tr><td>தொழிலாளர் எண்ணிக்கை</td><td>7</td></tr>
<tr><td>வருடாந்த செலவு (ரூபா)</td><td>2,066,000</td></tr>
</table>
<br>2)<br>தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செ.சு தொடர்பாக 2 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இவை பாலின சமத்துவ நிதிப்பாய்ச்சல் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையத்தின் நிர்மாணம் மற்றும் மேம்பாடு தொடர்பிலானவை. இந்தத் திட்டங்களுக்கு ரூ.92.88 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்ற தகவலும் வழங்கப்பட்டுள்ளது.</td>
<td>1)<br>நிதி அமைச்சு<br><br>2)<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு</td>
<td>இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்தோ நிதி அமைச்சு கூடுதல் விபரங்களைத் தரவில்லை.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகிய இரண்டும் வழங்கிய தகவல்கள் போதுமானதாக இல்லை. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.</td>
<td>எவ்வித முன்னேற்றமும் இல்லை</td>
</tr>
</table>

## பி.செ.சு 9 - அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை

<table>
<tr><th>பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்</th><th>மூலம்</th><th>பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து</th><th>முன்னேற்றத்தின் வகைப்பாடு</th></tr>
<tr><td>
1)<br>
பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலைய அமைப்புகள், விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் அலகின் செயல்பாடுகள் தொடர்பான செயல்திட்டங்களுக்கான பட்டியலை தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலாக வழங்கியது.<br><br>
2)<br>
தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது. மேலும் இலங்கையில் பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளைத் தடுப்பதற்கான ஐந்து கொள்கை கட்டமைப்புகளையும் தேசிய செயல்திட்டங்களையும் அவற்றுக்கான மதிப்பீடுகளையும், நிதி அமைச்சு வழங்கியுள்ளது. அவை கீழ் வருமாறு:
<table>
<tr><th>பிரதான திட்டங்கள்</th><th>கால அளவு</th><th>மதிப்பீடு (ரூ.மில்லியனில்)</th></tr>
<tr><td>நிவாரணம் மற்றும் மறுவாழ்வு குறித்த நடவடிக்கைகளுடன் இடர் முகாமைத்துவத்தில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்த ஏற்கனவேயுள்ள பொறிமுறையை மதிப்பாய்வு செய்தல்</td><td>2019 இறுதியில்</td><td>0.5</td></tr>
<tr><td>பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளைத் தடுப்பதற்கு கிராம மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ உப குழுக்களை வலுப்படுத்துதல்.</td><td>ஜனவரி - மார்ச் 2019</td><td>1.5</td></tr>
<tr><td>மீட்புப்பணிகளின் போது பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளில் இருந்து சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினரைப் பாதுகாக்க பொறிமுறைகளை உருவாக்குவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளிடம் பொறுப்பைக் கையளித்தல்.</td><td>ஜனவரி - மே 2019</td><td>1.5</td></tr>
<tr><td>பொலிஸ், நன்னடத்தை மற்றும் சுகாதாரம் போன்ற சிவில் பாதுகாப்பு முகவரகங்களுக்குச் சேவையைத் தொடர்வதற்கான திட்டங்களை உருவாக்குதல்.</td><td>ஜனவரி - ஜூன் 2019</td><td>2.5</td></tr>
<tr><td>பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளில் இருந்து தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு இனவிருத்திச் சுகாதார சேவைகள் வழங்குதல்.</td><td>ஜனவரி - ஜூன் 2019</td><td>4.0</td></tr>
</table>
</td>
<td>1)<br>தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு<br><br>2)<br>நிதி அமைச்சு</td>
<td>இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/சட்டம்/ ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>
தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு செயல்திட்டங்கள் தொடர்பில் தகவல்களை வழங்கினாலும் அவற்றின் முன்னேற்றம் அல்லது அவை நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்பது குறித்த தகவல்களை வழங்கவில்லை. மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திய காலப்பகுதி தொடர்பிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.<br><br>
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு வழங்கிய தகவல்களின் வகை அல்லது தகவல்களுக்கான காலப்பகுதி குறித்தும் நிதி அமைச்சு எதனையும் குறிப்பிடவில்லை. மேலும் செயல்திட்டங்கள் தொடர்பில் தகவல்கள் வழங்கப்பட்டாலும், பிரதான செயலாற்றுகை சுட்டியின் முக்கிய உறுப்பான இந்த செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எந்த தகவலும் வழங்கப்படவில்லை.<br><br>
இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஆகிய இரண்டும் வழங்கிய தகவல்கள் போதுமானதாக இல்லை. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.</td>
<td>எவ்வித முன்னேற்றமும் இல்லை</td></tr>
</table>

**பி.செ.சு 10 - அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிக்காட்டல்களின் எண்ணிக்கை**

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)**<br>பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வழங்கியதாக நிதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்தது.<br><br>**2)**<br>தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செ.சு தொடர்பாக 2 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இவை இரண்டும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அலகுகளை உருவாக்குவது தொடர்பானவை. இந்தத் திட்டங்களுக்கு ரூ.38.12 மில்லியன் செலவிடப்பட்டது என்ற தகவலும் வழங்கப்பட்டுள்ளது. | **1)**<br>நிதி அமைச்சு<br><br>**2)**<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆகியன வழங்கிய தகவல்களின் வகைப்பாடு அல்லது தகவல்களுடன் தொடர்புடைய காலப்பகுதி குறித்தோ நிதி அமைச்சு கூடுதல் விபரங்களைத் தரவில்லை.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நிதி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஆகிய இரண்டும் வழங்கிய தகவல்கள் போதுமானதாக இல்லை. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## பி.செ.சு 11 - திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும் அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)**<br>மதிப்பீட்டுக் காலப்பகுதியில் பால் அடிப்படையிலான சட்டத் திருத்தங்களோ, சட்டங்களோ கொண்டுவரப்படவில்லை என நீதி அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது.<br><br>**2)**<br>இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டி தொடர்பில் 2018 - 2019 காலப்பகுதியில் ரூ.12.3 மில்லியன் மொத்தமாகச் செலவிடப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது. | **1)**<br>நீதி அமைச்சு<br><br>**2)**<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/ சட்டம்/ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>மதிப்பீட்டுக் காலத்தில் பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்களைக் கவனத்தில் கொள்வதற்கு எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்பது நீதி அமைச்சிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பதிலில் தெளிவாகின்றது.<br><br>மேலும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>நீதி அமைச்சின் பதிலை அடிப்படையாகக் கொண்டு இந்த பிரதான செயலாற்றுகை சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்படுகிறது. | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## பி.செ.சு 12 - பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை

| பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம் | மூலம் | பெற்றுக்கொண்ட தகவல்கள் தொடர்பான கருத்து | முன்னேற்றத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|
| **1)**<br>தகவல் அறியும் உரிமை கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செ.சு தொடர்பாக 31 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கு ரூ.61.72 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்ற தகவலும் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டங்கள்:<br>▪ பால் அடிப்படையிலான வன்முறைகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்.<br>▪ சிறுவர் துஷபிரயோகங்களைத குறைப்பதற்காக தேசிய ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு செயல்திட்டம்.<br>▪ சிறுவர் பாலியல் துஷபிரயோகங்களைத தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்.<br>▪ பால் அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பது மற்றும் அதற்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை வலுப்படுத்துதல்.<br>▪ பெண்கள் காப்பகங்களை பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்.<br>▪ இலங்கை மகளிர் பணியகத்தின் செயல்திட்டங்கள்.<br>▪ பாடசாலை பாடத்திட்டத்தில் வாழ்க்கைத் திறன் விருத்தி மற்றும் பாலியல் கல்வியை இணைத்தல்.<br>▪ பாடசாலையில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுதல் மற்றும் பலப்படுத்துதல்.<br>▪ “ஜனபவுற பிரஜாபாடக” சிறுவர் பாதுகாப்பு திட்டங்கள்.<br>▪ பெருந்தோட்டத் துறை சார் சிறுவர்களையும் சமூக உறவுகளையும் பாதுகாத்தல்.<br>▪ கரையோரப் பிரதேசத்தில் உளவியல் மற்றும் சமூக ரீதியான தலையீடுகளை மேற்கொள்ளல்.<br>▪ இளவயது கர்ப்பத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு மாவட்ட அளவில் திட்டங்களை செயல்படுத்துதல்.<br>▪ விஞ்ஞான துறை ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.<br>▪ பாடசாலை அதிபர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.<br>▪ பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.<br>▪ சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் நிபுணர்களுக்குப் பயிற்சியளித்தல்.<br>▪ மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவத்தில் மருத்துவர்களைப் பயிற்றுவித்தல்.<br>▪ சிறுவர் காப்பக நிர்வாக அமைப்பின் ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.<br>▪ சிறுவர்களுக்கு எதிரான இணையக் குற்றங்களை ஒழிப்பதற்காக ஐநுஊ வெளியீடுகளைத் தயாரித்தல்.<br>▪ உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் மற்றும் பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் ஆகியவற்றைக் கொண்டாடுதல்.<br>▪ சிறப்பு விசாரணை வழக்குகள் மற்றும் நீதித்துறை விவகாரங்களைக் கண்காணித்தல்.<br>▪ பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதற்காக காணொளிப்பதிவு (வீடியோ) ஆதாரங்களைப் பயன்படுத்துதல்.<br>▪ காணொளிப்பதிவு ஆதாரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளைப் பேணுதல்.<br>▪ இணைய கண்காணிப்பின் கீழ் விசாரணைகளை மேற்கொள்ளல்.<br>▪ இணைய கண்காணிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகளைப் பராமரித்தல்.<br>▪ சிறுவர்களைப் பாலியல் ரீதியாகத் தொல்லைசெய்யும் குற்றவாளிகளைக் கண்காணித்தலும் பின்தொடர்தலும்.<br>▪ 1929 சிறுவர் அவசர உதவி தொலைபேசி இணைப்பை எளிதாக்குவதுடன் பராமரித்தல்.<br>▪ சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் ஒழுங்குபடுத்தலை மேற்பார்வையிடுவதுடன் உளவியல் ஆதரவை வழங்குதல்.<br>▪ இடர் முகாமைத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் இடர் நிவாரண சேவைகளை வழங்குதல்.<br>▪ பொதுப் போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக போக்குவரத்து அமைச்சுடன் கலந்தாலோசித்தல்.<br>▪ பொதுப் போக்குவரத்தில் பாலியல் துன்புறுத்தல்களை முறையிடுவதன் மூலம் அதனைக் குறைப்பதற்கான அமைப்புகளை உருவாக்குதல். | **1)**<br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | இந்த பி.செ.சு தொடர்பான மதிப்பீட்டில் ஒதுக்கீட்டுத் தொகையின் வருடாந்த அதிகரிப்பு 0 - 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.<br><br>மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 இல் குறித்த திட்டங்களை முன்னெடுக்க செலவிடப்பட்ட மொத்த தொகையின் விபரங்களைப் பிரித்து வழங்கவில்லை.<br><br>இதன் காரணமாக பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குக் கிடைத்த தகவல்கள் போதுமானதாக இல்லை. காலப்போக்கில் செலவினங்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதைத் தீர்மானிக்க முடியாதுள்ளது. ஆகவே இந்தச் சுட்டி எவ்வித முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | எவ்வித முன்னேற்றமும் இல்லை |

## வரவு செலவுத் திட்ட அழைப்பு - 2018 க்கான மேலதிக பிற்சேர்க்கை மற்றும் 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகள்

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
DEPARTMENT OF NATIONAL BUDGET
මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
பொதுத்திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
General Treasury, Ministry of Finance and Mass Media, Colombo 01, Sri Lanka
**Web Site:** www.treasury.gov.lk **e-mail:** budget@nbd.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/CBP/4/1/2-2018
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி. / Date 2017.07.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**வரவு செலவுதிட்ட அழைப்பு – 2018 இற்கான மேலதிக பிற்சேர்க்கை - II**
**2018 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்**

"வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல் மற்றும் பணிப்புரைகள்" என்ற 2017.07.25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக. இப்பிற்சேர்க்கையின் மூலம் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய மூன்று கொள்கை உபாயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு மேலதிக பணிப்புரைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்
2. பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பு
3. மாற்றுத் திறனாளிகளை வலுவூட்டல்

**1. பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்**

1.1 இலங்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடொன்று என்ற வகையில், 17 இலக்குகளையும் 169 குறிக்கோள்களையும் 244 சுட்டிகளையும் உள்ளடக்கிய பேண்தகு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சித்திட்டத்தினை பின்பற்றுவதற்கு கைச்சாத்திட்டுள்ளது. வறுமை, பட்டினி சமத்துவமின்மை என்பவற்றினை முடிவுக்கு கொண்டுவருதல், சுற்றாடலினைப் பாதுகாத்தல், கல்வி மற்றும் சுகாதார வசதிகளின் கிடைப்பனவினை மேம்படுத்தல், சமாதானம், நீதியினைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிறுவனங்களை ஸ்திரப்படுத்துதல் என்பன நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) நோக்கமாகும். இந்த நிலையான அபிவிருத்தி இலக்குகளின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதானது வரவு செலவுத்திட்டத் தயாரிப்புடன் நேரடியாகத் தொடர்பு படுத்தப்படுகின்றது. அதாவது இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதாகும். எனவே, 2018 இலிருந்து தேசிய அபிவிருத்தி இலக்குகளுடன் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளும் (SDGs) ஒருமித்துக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.நா பேண்தகு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கு வசதியளித்தல் மற்றும் கண்காணிப்பு என்பவற்றுக்கு இத்தெரிவுக்குழு பொறுப்பாகும்.

1

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: 0094-11-2484665, 0094-11-2484639 (Fax)
කාර්යාලය / அலுவலகம் / Office: 0094-11-2484669, 0094-11-2484853
ෆැක්ස් අංකය / தொலைநகல் இல / Fax No.: 0094-11-2484807

1.2 எனவே, செலவின முகவர்கள் நடைமுறை மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுளை தேசிய வரவு செலவுத்திட்டத்துடன் இணைந்த வகையில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுடன் செயற்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். இச்செயன்முறையின் பிரதான நோக்கம் அத்தகைய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நேரடியாக ஒத்துழைப்பு வழங்கும் அபிவிருத்தி இலக்குகள் மீது செலவின முகவர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1.3 நிலையான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல் மற்றும் 2030 நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்பார்வை செய்தல் தொடர்பாக உரிய அமைச்சுக்களுடன் ஏற்பாடுகளை மேற்கொள்ளும். தேசிய அபிவிருத்தி வேலைச் சட்டகத்துடன் நிலையான அபிவிருத்தி இலக்குகள் ஒன்றிணைவதனை தேசிய திட்டமிடல் திணைக்களம் உறுதிப்படுத்துவதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வடிவமைக்கும் போது அவற்றினையும் சேர்த்துக்கொள்வது குறித்த நிரல் அமைச்சுக்களின் பொறுப்பாகும்.

1.4 பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 2030 இன் இறுதியில் அடையப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களமும் தனது பங்களிப்பினைச் செலுத்தும். நிலையான அபிவிருத்தி இலக்குகளை உள்நாட்டில் செயற்படுத்துவதற்கு அதன் சுட்டிகள் உரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் அவை “இலங்கையில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் சுட்டிகளது நிலைமை : 2017” (Status of Sustainable Development Goals Indicators in Sri Lanka :2017) என்ற ஆவணம் சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியற் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

## 2. பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டத் தயாரிப்பு

2.1 நிலையான அபிவிருத்தியின் 5 ஆவது இலக்கானது பால் சமத்துவத்தினை அடைந்து கொள்வதற்கும் பெண்கள் மற்றும் சிறுமிகளினை வலுவூட்டுவதற்கானதாகும். இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்கள் மற்றும் சிறுவர்களாக இருக்கின்றனர் என்ற வகையில் வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்போது பால் சமத்துவம் உறுதிப்படுத்தப்படும். இதற்கமைவாக வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய பின்னிணைப்பு ஒன்றில் தரப்பட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகள் கவனத்திற் கொள்ளப்படுவதுடன் அச்செயலாற்றுகை சுட்டிகள் 2018 இல் அடையப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2.2 2016.06.07 ஆந் திகதிய அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டவாறு இலங்கையில் பாலியல் ரீதியான மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை நீக்குவதற்கான செயற்பாட்டுத் திட்டம் 2017 – 2019 நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்தின்கீழ் செயற்படுத்தப்படும். இச்செயற்பாட்டுத் திட்டத்தின் முக்கியநோக்கம் “பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வன்முறையற்ற வாழ்வு” என்பதாகும். இத்திட்டமானது பல்துறை செயற்படுத்துகையினை உள்ளடக்கியுள்ளது என்றவகையில் குறித்த நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள் இத்திட்டத்தினை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

2

3. மாற்றுத் திறனாளிகளை வலுவூட்டல்

3.1 மாற்றுத் திறனாளிகள் மீதான கவனம் மற்றுமொரு பிரதான விடயமென்பதுடன் 2018 வரவு செலவுத்திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. அங்கவீனம் தொடர்பான "தேசிய கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அங்கவீனர்களுக்கான இலங்கை தேசிய செயற்பாட்டுத் திட்டம்" என்ற திட்டத்தினை செயற்படுத்துவதற்கு அமைச்சரவை ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளதுடன் வலுவூட்டல், சுகாதாரம் மற்றும் புனரமைப்பு, கல்வி, பணி மற்றும் வேலைவாய்ப்பு சுற்றாடல் பாதுகாப்பு, தரவு மற்றும் ஆராய்ச்சி அத்துடன் சமூக நிறுவனங்களின் இணைப்பு ஆகிய 7 விடயங்களை செயற்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றுக்கமைவாக மாற்றுத்திறனாளி சமூகத்தினை வலுவூட்டும் வகையில் குறித்த திட்டங்கள் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளை அடையாளம் காண்பதற்கும் மாற்றுத்திறனாளிகளை சமூகத்தின் சம பயன்பாடுடையவர்களாக மாற்றுவதற்கும் முகவராண்மைகள் கேட்கப்பட்டுள்ளன.

4. 2018 வரவு செலவுத்திட்டமானது செயவாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட வரவு செலவுத்திட்ட தயாரிப்பு என்ற அடிப்படையில் தயாரிக்கப்படுவதனால் அளவிடக்கூடிய வெளியீடுகள் மற்றும் விளைவுகளை அடைந்து கொள்வதற்கு வளங்களை கோருகின்ற பொழுது மேற்குறித்த விடயங்களை கவனத்திற் கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

5. மேற்குறித்த விடயம் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட விடய அலுவலரினை தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/கே.டி.எஸ்.ருவன்சந்ர**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்

3

பின்னிணைப்பு I

**பால் சமத்துவத்தினை அடைந்து கொள்ளுதல் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டலுக்கான பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

1. ஊழியப்படையில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதத்தினை அதிகரித்தல்.

2. நிதியுதவி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக வீடுகளை கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.

3. பால் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்டு பேணப்படுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை.

4. தேசிய தொழிற் பயிற்சி (NVQ) சான்றிதழ்கள் பெற்ற பெண்களின் சதவீதத்தினை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிற்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையினையும் அதிகரித்தல்.

5. எஸ்எம்ஈ கடன்கள் மற்றும் மானியங்களினை பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை.

6. வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை.

7. தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையினை கொள்கை தலையீடுகளின் மூலம் அதிகரித்தல்.

8. பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை.

9. அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் எண்ணிக்கை.

10. மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை.

11. திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும் அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை.

12. பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை.

4

ISBN 978-624-5514-17-5
9 786245 514175

Verité Research
Strategic Analysis for Asia

A | No. 5A, Police Park Place, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W| www.veriteresearch.org